தமிழக அரசுடன்

# புனிதப்போர்

மூதறிஞர் பிதாமகர் திரு.இரா.தேவஆசிர்வாதம் ஐயா

அவர்களின் கடிதத் தொடர்பு...





## இரா,தேவ ஆசிர்வாதம்

முன்னாள் டிப்டி கலெக்டர்

தேவேந்திர குல வேளாளர்களின் வரலாற்றை மருத நில மக்களின் மள்ளர் வரலாறாக முதல் முதலில் கண்டு சொல்லிய வரலாற்றறிஞர் இரா, தேவ ஆசிர்வாதம் அவர்களுக்கு இந்த இலவச வெளியீட்டை அன்புக் காணிக்கையாக்குவதில் பெருமையும். சிறப்பும் அடைகின்றோம்

தே.இராசசேகர் B.E.,
தமிழர் சமுக சிந்தனையாளர்

1947 சுதந்திரத்திற்கு பின் இன்று வரை 60 ஆண்டுகள் ஆகியும் ஆட்சியாளர்களும். அரசியல்வாதிகளும், பத்திரிக்கைகளும், தாழ்த்தப்பட்டோர், தலித் என்று அடையாளப்படுத்தி வருவதால் பட்டியல் சாதியினர் வேதனைப்பட்டு கண்ணீர் வடிப்பதைப் பார்த்து வெட்கப்பட்டு தலை குனியவேண்டியவர்கள் முதல் குடிமகன் குடியரசு தலைவரும், உச்ச, உயர் நீதி மன்றநீதி அரசர்களே ஆவர்கள். ஏன் என்றால் அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், அரசுகளுக்கு அறிவுரைகள் வழங்கி இருக்கவேண்டும்

கோ.ஜான் அய்யாத்துரை
தமிழர் சமுக சிந்தனையாளர்

நாங்களும் மண்ணின் மைந்தர்கள் என்று தமிழர்கள் சொல்வார்கள், அது அவர்கள் உரிமை, அதில் உண்மை இருக்கிறது, ஆனால் இந்த மண்ணின் மணவாளனே நீதான், இதை எந்த கொம்பனானாலும் மறுக்க முடியாது, நீயே மூத்ததமிழன்! நீயே மூவேந்தர் மரபினர் !! சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும், திவாகரம், பிங்கலம், சூடாமணி, நிகண்டுகளிலும், பிற்கால சிற்றிலக்கியங்களிலும் சொல்லப்பட்டு இருக்கும். உயிரோட்டமான மள்ளர் எனும் நாயகனே நீதான்! உன் முதல் பெயரும் தேவேந்திரன் இன்றைய பெயரும் தேவேந்திரன்

சா.குருபாதம்
தமிழர் சமுக சிந்தனையாளர்

## தமிழக வரலாற்றுக்குழு சங்ககால வரலாற்றை இருட்டடிப்புச் செய்தது பற்றி 12-1-91ல் ஆசிரியர் தமிழக முதல்வருக்கு எழுதியது

வணக்கம்

1990 ஆகஸ்டு இறுதியில் திரு. வி. கல்யாண சுந்தரனாரின் 107-வது பிறந்த தின விழாவையொட்டி சென்னையில் நடந்த கூட்டத்தில் தங்கள் முன்னிலையில் புலவர் கே. கோவிந்தன் தமிழக வரலாற்றுக் குழுவினர் எழுதிய சங்க காலம் பற்றிய தமிழக வரலாறு முறையாக எழுதப்படவில்லையென்றும். அதில் பல முரண்பாடுகள் உள்ளதென்றும், எனவே அதை திரும்பப்பெற்று வரலாற்றை மீண்டும் எழுதி வெளியிட ஆவன செய்ய வேண்டும் என்றும் கோரியதைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன். புலவர். திரு. கோவிந்தன் பேசியதைத் தொடர்பாக எனக்குத் தெரிந்த சில முரண்பட்ட கூற்றுக்களைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வரலானேன். நான் வரலாற்று வல்லுநனும் அல்ல, தமிழ்ப் புலவனும் அல்ல, ஆனால் நாநூறு, ஐநூறு ஆண்டுகளாகத் திட்டமிட்டு மறைக் கப்பட்ட தமிழ் மூவேந்தர் மரபு பற்றிய சரித்திர உண்மையை மூவேந்தர் யார்?நூல் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தியவன் என்றமுறையில், சங்க காலம் பற்றிய நூலில் கண்ட வரலாற்று மாற்றங்களை இங்கு தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன், மூவேந்தர் மரபை வழக்கம்போல் வரலாற்று வல்லுநர் இருட்டடிப்புச் செய்துள்ளனர்,

முதற்கண் நான் குறிப்பிட விழைவது எனது மூவேந்தர் யார்? நூல் பிரதிகள் ஐந்தை வரலாற்று வல்லுநர் ஆய்வுக்காக இலவசமாய்ப்பெற்றும். நூலை ஆய்வில் காட்டாமல், ஆணவத்தாலும், அடாவடித்தனத்தாலும் எனது முடிவுகளை ஏற்கவோ, மறுக்கவோ இல்லை, இதுவரை வரலாற்றாசிரியரும், தமிழ்ப் புலவரும் எழுதி வந்த முறையிலேயே சங்க காலம் பற்றிய வரலாற்றைத் தொகுத்திருக்கின்றனர். தமிழகத்தில் நிலவும் இன்றையச் சாதி ஏற்றத் தாழ்வு வரலாற்று உண்மை மறைக்கப்பட்டதன் விளைவு என்பதை உணர்ந்த தி.மு.க. முதன் முதல் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தபோது, தமிழக வரலாற்றை எழுத டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் வரலாற்றுக்குழு ஒன்றை நியமித்தது. அக்குழு 1975-ல் தமிழக வரலாறு "தொல்பழங்காலம்" என்றமுதல் தொகுதியைத் தங்களின் அணிந்துரையுடன் வெளியிட்டது, அதன்பின் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஔவை துரைசாமி பிள்ளை அவரது மறைவிற்குப் பின் டாக்டர் கே. கே. பிள்ளையின் தலைமையில் செயல்பட்ட வரலாற்றுக்குழு 1983-ல் தமிழக வரலாறு சங்ககாலம் பற்றிய இரண்டாம் தொகுதியை அரசியல் "வாழ்வியல்" என்று இரு பகுதிகளாக வெளியிட்டது. இந்த இரண்டாம் தொகுதி 1980-ஆம் ஆண்டுவரை கிடைத்துள்ள கருத்துக்களைத் தொகுப்படுத்தி, இயன்றஅளவு செம்மையாக உருவாக்கி வெளியிட்டுள்ளதாகப் பதிப்பகத்தார் தமது உரையில் குறிப்பிட்டுள்ளனர், மேலும் நடுவு நிலையில் நின்று ஆராய்ந்து நூல் எழுதப்பட்டதாகவும் கூறியுள்ளனர். இவரது கூற்று சரியன்று, சங்க காலவரலாற்றில் கண்டுள்ள பல செய்திகள் தொல் பழங்கால நூலில் கண்டுள்ள முடிவுகளுக்கே முரண்பாடாயுள்ளன.

1977-ல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது தமிழக வரலாறு மறைக்கப் பட்டிருப்பதாகவும், உண்மையான வரலாற்றைஎழுதி வெளியிட முந்தைய தி.மு.க. அரசு தவறி விட்டதாகவும். அதைத் தமது (அ.தி.மு.க.) அரசு எழுதி மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு கூட்டி வெளியிடும் என்றும் அமைச்சர்கள் பல கூட்டங்களில் பேசி வந்தனர் என்பது தங்களுக்கு தெரிந்த ஒன்றே.

முதற் தொகுதியாகிய "தொல் பழங்காலம்" என்ற நூலில் திராவிட நாகரிகம் மருத நிலத்தை மையமாகக் கொண்டு மாட்சியுற்றது என்று ஆர்.சி. மஜும்தாரும் (பக்கம் 128) உழவும் போரும் அவரது அன்றாட வாழ்க்கைத்தொழில், உள்நாட்டில் அல்லது ஆற்று வெளியில் அவர் நாட்டம் கொண்டிருந்தனர். இதனால் நீர்ப்பாசன முறையில் அமைந்த வேளாண்மைத் தொழிலில் அவர்கள் சிறப்பு மிக்க தேர்ச்சி பெற்றிருந்தனர் (பக்கம் 150) எனக் கால்டுவெலும் கூறுவதாகக் கண்டு உள்ளது. இதை வரலாற்று அறிஞர் ஒருவரும் மறுப்பதற்கு இல்லை. உலக நாகரிகங்களே ஆற்றோரத்தில் தான் தோன்றியதென்பதுவும், அதற்குக் காரணமானவர் உழவர் சமுதாயம் என்பதுவும் மறுக்க முடியாத உண்மையாகும். இந்த ஏர்த் தொழிலும். போர்த் தொழிலும் செய்த மருதநில மக்களை மையமாகக் கொண்டு தான் சங்க இலக்கியம் தோன்றியது. தொல்காப்பியம், திருக்குறள் உள்பட சங்ககால வரலாறு இம்மரபினரை முற்றும் இருட்டடிப்புச் செய்துள்ளதோடு மட்டுமின்றி, இவரது சிறப்பியல் புகளை பிறமரபினர்க்கு உரியதெனப்படும் படியாக எழுதப்பட்டுள்ளது.

தமிழக மருதநிலத்தில் ஏர்த்தொழிலும், போர்த் தொழிலும் செய்த மக்கள் யார்? இவரைச் சேந்தன் திவாகரம் அருந்திறல் வீரர்க்கும் பெருந் திறலுழவர்க்கும் வருந்தகைத்தாகும் மள்ளரெனும் பெயர் என்று கூறுகின்றது. சங்க இலக்கியங்கள் இவரை மருத நிலத் தலைவர்களாகவும், போர் மறவராகவும், மன்னராகவும், ஏன் திருமால், முருகனாகவும் இயம்புகின்றன, ஆனால் ஏனோ வரலாற்றில் இவரை மருத நில மக்களாகவோ, போர் மரவராகவோ, மன்னராகவோ கூறவில்லை. மாறாக உழவுத் தொழில் செய்தவரை இன்றைய வேளாளர் எனப் பொருள்படும் முறையில் வரலாறு அமைந்துள்ளது, அரசியல் பகுதி பக்கம் 580-ல் சேர அரசன் நார்முடிச் சேரனால் போர்க் காலங்களில் சிறைபிடிக்கப்பட்ட பகை மன்னர் போர் மறவர் "கொண்டி மள்ளர்" என வழங்கினர் எனக் கண்டுள்ளது. (சங்க கால வரலாற்றில் இந்த ஒரு இடத்தில்தான் மள்ளர் என்றபெயர் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது) வாழ்வியல் நாகரிகமும், பண்பாடும் என்ற தலைப்பின் கீழ் பக்கம் 191-ல் போர்க் காலத்து மறவர், மழவர், உழவர், குறவர், போன்ற பலவகை மக்களும் படை வீரராகப் பணிபுரிந்தனர் என்று கண்டுள்ளது, இதற்கு ஆதாரமாக டாக்டர் கே.கே.பிள்ளையின் "தமிழக வரலாறும் பண்பாடும்" என்ற நூலைக் காட்டியுள்ளனர். தமிழ் இலக்கியங்களிலிருந்து ஆதாரம் ஒன்றும் காட்டவில்லை, தமிழ்த்தொல் படையினர் மருதநில மன்னர் குடி என்பதை மறைப்பதற்கு இவ்விதம் எழுதுகின்றனர், ஆக வரலாற்றுக் குழுவினர் ஆய்வுப்படி மள்ளர் சேர மன்னனின் பகை அரசரின் படை மறவர் ஆவர், நார்முடிச் சேரலை "மள்ளர் ஏறே" என்று "பதிற்றுப் பத்து" (38-15) கூறுவது மள்ளருள் சிங்கம் போன்றவன் என்றுதான் பொருள்படும் என்பது இவர்கள் அறியாததா? தொண்டைமான் இளந் திரையனைப் பெரும் பாணாற்றுப்படை (செய் 455) 'மள்ளர் மள்ள' என்றும் மன்னன் தாமான் தோன்றிக் கோனை புறநானூறு (செ, 399) மள்ளர் மள்ள. என்னும் புறம் 219. 2-81/5 முறையே கோப்பெருஞ் சோழனையும், கோப்பெருநற்கிள்ளியையும் "மள்ள" எனச் செப்புவது இந்த வல்லுநர்களுக்குத் தெரியாததா? பாண்டியன் நெடுஞ்செழியனுடன் போரிட சோழநாட்டு வம்ப மள்ளர் படை வந்தது (புறம் 77. 78. 79) இவர் கண்ணில் படவில்லையா? மன்னர் எயினர். ஆறலைக் கள்வர், குறவர், கானவர், இவர்களைப் போரில் ஈடுபடுத்தினர் என்பதற்கு ஆதாரமில்லை, மழவர் பிறநாட்டவர் தமிழகத்தின் மீது படை எடுத்து வந்தவர், பிற்காலத்தில் பாண்டியர் அவரைப் படைவீரராய்ப் பயன்படுத்தினர் என்பது மதுரைக் காஞ்சியால் தேற்றம், வாழ்வியல் பகுதி பக்கம் 16-ல் கண்டுள்ள திணை நிலை மக்கள் நிகண்டுகளின்படி எழுதப்படவில்லை என்பதுவும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.



வாழ்வியல் பகுதி பக்கம் 65-ல் நகரங்களிலும் பேரூர்களிலும் மேட்டுக்குடி மக்கள் என்று சிறப்பித்துக்கொள்ளத் தக்க வகையில் நால்வகைச் சமுதாயத் தலைவர்கள் தோன்றினர் எனவும். அவர் அரசர். அந்தணர். வணிகர். வேளாளர் என வழங்கியதாகவும் பக்கம் 69-ல் உழவுத் தொழிலைச் செய்து வாழ்ந்து வந்தவர் வேளாளர் என வழங்கியதாகவும் கண்டுள்ளது, இக்கருத்து (அரசியல் இயல் 9 ஆட்சிமுறைபக்கம் 540-ல் நால்வகை மரபு உண்டு என்பது) மறுக்கப்பட்டுள்ளது, இது முன்னுக்குப்பின் முரணாக உள்ள ஒன்றாகும், நால் வகைப் பிரிவினர் தமிழகத்தில் சங்க காலத்தில் இல்லை என்றும். தொல்காப் பியத்தின் பொருள் அதிகாரம் மரபியல் சூத்திரம் இடைச் செருகல் என்றும் பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர், இதை எனது வேளாளர் யார்? என்ற நூலில் விளக்கியுள்ளேன், அரசியல் பக்கம் 564-ல் நாட்டுப் படைபற்றிப் பேசப்படுகிறது. படைகளில் தொல்படை என்பது ஒன்று எனவும், அது நிலையானது என்றும் அதில் உள்ள வீரர்கள் நிலை மக்கள் எனப்பட்டனர் என்றும் கண்டுள்ளது, அதோடு அவரின் பண்பாட்டுக் கூறுகளையும் விளக்கியுள்ளது. ஆனால் தொல்படையினர் மள்ளர் குடியைச் சேர்ந்தவர் என்று கூறக்காணோம்.

அரசியல் பகுதி பக்கம் 569-ல் படைதிரட்டுதல் பற்றிப் பேசப்படுகிறது. பொது மக்களிடமிருந்து மறவர் படையை திரட்டுவது உண்டு. இங்கு மறவர் என்பதற்குப் பதில் போர் வீரரைத் திரட்டுவது உண்டு எனக்கண்டிருக்க வேண்டும், இவ்வாறு மறவர் படை என்று குறிப்பிட்டுள்ளது, இக்கால மறவரைச் சுட்டவில்லையா? தொண்டைமான் இளந்திரையனை "மள்ளர் மள்ள! மறவர் மறவ செல்வர் செல்வ! செரு மேற்படுந! எனப் பெரும்பாணாற்றுப்படை (செய். 455) கூறுவதுவும் மன்னன் தாமான் தோன்றிக் கோனை! அறவர் அறவன்! மறவர் மறவன்! மள்ளர் மள்ளன்! என்று புறநானூறு (செய். 399) கூறுவதுவும் கவனிக்கத் தக்கது. இங்கு மறவர் மறவன் என்பது கொடியோர்க்கு கொடியன் என்றும். "மள்ளர் மள்ளன்" என்பது போர் வீரருள் சிறந்தவன் என்றும் உரையாசிரியர் பொருள் கண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கியங்களில் மருதநில மள்ளருள் போரில் ஈடுபடுபவரும் ஆறலைத்துண்ணும் எயினரும், வேட்டும் மறவர் என்று சுட்டப்பட்டிருப்பதுவும். மறவர் என்றசொல் இருவேறு தொழில் செய்பவரைக் குறிக்கும் என்பதுவும் வரலாற்று அறிஞர் அறியாததா? கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணத்தில் கூட மறவர் வேட்டுவராகவும், மள்ளர் படை மறவராகவும் வருவது காணத்தக்கது,

வாழ்வியல் பக்கங்கள் 3. 4-ல் ஊர், சேரி பற்றி கூறியிருப்பது சரியன்று, ஊர் என்பது மருத நில மக்கள் வாழ் நிரந்தரக் குடியிருப்பு, இது அந்நாளில் கோட்டைக்குள் இருந்தது என்பது "உழிஞைதானே மருதத்துப் புறனே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் தேற்றம், சேரி என்பது தமிழர் அல்லாதவர் (பிறதிணை நிலை மக்கள் உள்பட) ஊருக்கு (கோட்டைக்கு) வெளியே தற் காலிகமாய் தங்கிய குடியிருப்பு ஆகும். ஊர் வாழ்நரை அண்டித்தொழில் செய்ய பிறநிலத்து மக்கள் அக்காலத்தில் ஊருக்கு வெளியே தங்கள் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்தனர், பிறநாட்டினர் வியாபாரத்திற்காக வந்து தங்கிய இடங்களும் சேரி என வழங்கியுள்ளன. சேரிகள் பல சேர்ந்து ஊர் எனக் கொள்வது தவறாகும், ஆக ஊர் வேறு, சேரிவேறு என்று வரலாறு அமைய வேண்டும்,

வரலாற்றில் அரசு தோன்றிய இடம் பற்றியோ. அவை எவ்வாறு தோன்றியது பற்றியோ பேசப்படவில்லை. வாழ்வியல் இயல் 3 "நாகரிகமும் பண்பாடும்" என்றதலைப்பில் (பக்கம் 191-ல்) நிலக்கிழார்களே குறுநில மன்னர்களாக விளங்கினர், அவர்களிடையே இருந்து வேந்தர்கள் தோன்றினர் என்று கண்டுள்ளனர், அக்காலத்தில் பல மொழிகள் பேசும் பல்வேறு இனக் குழுக்கள் இருந்திருக்கின்றன, மூவேந்தர் தமிழர் வாழ் மருதநில மக்களிட மிருந்து தோன்றியவர் என்றோ. அவர் ஒரே குடியைச் சேர்ந்தவர் என்றோ குறிப்பிடக் காணோம், மாறாக அவர்கள் தனித்தனிக் குடியினர் எனப் பொருள்பட வரலாறு அமைந்துள்ளது. சேரர், சோழர் குலம் பற்றி ஒன்றும் கூறாதபோது. அரசியல் பகுதி பக்கம் 352-ல் பதிப்பகத்தார் "பாண்டியர் குலம்" எனப் பொடி எழுத்தில் ஒரு தலைப்புக் கொடுத்து அதற்கு அடிக்குறிப்பு மூலம் விளக்கம் தந்துள்ளனர், அக்குறிப்பின்படி சில வரலாற்றாசிரியர் மறவர் பாண்டிய மரபினர் என்றும், சிலர் கள்ளர்தான் பாண்டியர் வழிவந்தவர் என்றும் கூறி வருவதாகவும் இப்போது பள்ளர்தாம் சங்க இலக்கியங்களில் பேசப்படும் மள்ளர் என்றும், மள்ளர்தான் பாண்டிய மரபினரென்று உரிமை பாராட்டுகின்றனர் என்றும், ஆனால் ஒரு இடத்தில் அது ஆராயத்தக்க தென்றும். பிறிதொரு இடத்தில் அது நம்பத் தக்கதல்ல என்றும் கண்டிருக்கின்றனர், (வரலாற்றுக் குழுவினர் மூவேந்தர் யார்? நூல் பிரதிகளை என்னிடமிருந்து பெற்று இவ்விதம் எழுதியிருப்பது விந்தையாய் உள்ளது).

இன்னுமொரு பெரிய விசித்திரம் என்னவெனில் அரசியல் பக்கம் 421-26-ல் கொங்கு நாட்டுச் சமூகநிலை "கொங்குச் சமவெளி மக்கள்" என்ற தலைப்புகளில் கண்டுள்ளவைகள் தற்கால நிலையைப் பற்றியவை ஆம், இவை சங்ககாலப் பகுதியில் இடம் பெறத் தக்கதன்று, இவற்றில் கொங்குக் கவுண்டர் சங்க காலத்தில் இருந்ததாகவும், அவர் வேட்டுவக் கவுண்டர், வேளாளக் கவுண்டர் என இரு பிரிவினர் எனவும், கொங்கு வேளாளர்க்கு அகத் தொழில் செய்யும் சாதியினர் கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், கொங்குப் பள்ளர். கொங்கு குயவர் என அழைக்கப்படுகின்றனர் எனவும் கண்டுள்ளது. கொங்கு வேளாளர் என இன்று வழங்குபவர் இடைக் காலத்தில் வடக்கேயிருந்து வந்தவராகவே வரலாறு கூறும், இவர் தமிழ்த்தொல் குடியினர் அன்று, சோழன் பூர்வ பட்டயம், மதுக்கூர் பட்டயம் போன்றவை இவர்கள் குடியேற்றத்தைப் பற்றி கூறுவதைக் காணலாம். இவர்கள் கால்நடைகளைப் பேணுபவராகவே குடியேறியுள்ளனர். இவர்கள் குடியேறுங்காலை அப்பகுதியில் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது, பூர்வீகத் தொழில் மக்கள் இவர்களுக்குத் தொழில் செய்ய மறுக்க. தங்கள் பிரிவிலிருந்தே பறையர், நாவிதர் முதலிய தொழிலாளர்களை நியமித்திருக்கின்றனர், குயவரை வேற்று இடங்களிலிருந்து தருவித்து குடி அமர்த்தி. அவர்களுக்குப் பிரத்யேக சலுகைகளும் வழங்கியிருக்கின்றனர், தமிழ் வளர்ச்சிக் குழுவில் கொங்கு வேளாளர் எனக் கூறுவோர் செல்வாக்குப் பெற்றிருந்ததன் விளைவாகவே. கொங்கு வேளாளர் சங்க கால வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றனர் எனக் கருத வேண்டியுள்ளது. இது தொடர்பாக இவர் தமது மரபை உயர்த்திக் கொள்ள மேற்கொண்ட இன்னுமொரு செய்கையைப் பின்னால் கூறுகிறேன்.

ஏற்கனவே குறிப்பிட்டபடிநான் அரசு பணியிலிருந்த போழுதே மூவேந்தர் மரபு பற்றி ஆராய்ந்து வந்தவன்,தமிழகத்தில் நிலவும் சாதி வேற்றுமையும், ஏற்றத் தாழ்வும் அரசியல் காரணமாகவே ஏற்பட்டது என அறியலானேன். தமிழ் மூவேந்தர் ஆட்சி வீழ்ச்சியுற்று அந்நியநாட்டினர் ஆட்சிக்கு வந்த காலை-



தோற்றமும், ஏற்றமும் பெற்றவர்தான் இக்கால வெள்ளாளக் கூட்டமும், முக்குலமும் ஆம்,தமிழ் வேந்தர் ஆட்சியல் வேளாளர் வெள்ளாளர் என்றும், மறக்குலம் என்றும் சிறப்பிக்கப்பட்டவர் மருதநிலமள்ளர் குடியேயாம், மூவேந்தர் வீழ்ச்சியுற வேளாளர், வெள்ளாளர் என்றும்,மறக்குலம் என்றும் போற்றப்பட்ட மள்ளர்குடி பள்ளர் ஆக்கப்பட்டு கொத்தடிமை நிலை எய்த காலை,அவரது சிறப்புகளைக் கலப்பினங்களும். காட்டு வாணரும் தங்களுக்கு உரித்தாக்கி. தங்கள் நிலையை உயர்த்திக் கொண்டனர், தமிழக உண்மை வரலாற்றை வெளிப்படுத்தினால். இன்று உயர்நிலையில் உள்ளோர் செல்வாக்கு இழக்கவேண்டிய நிலை எழும் என்ற காரணத்தால்.அதை மறைப்பதிலேயே வரலாற்றாசிரியர் கண்ணும் கருத்துமாய் இருந்து வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை.

டாக்டர் கே.கே.பிள்ளை "தமிழக வரலாறு? மக்களும் பண்பாடும்" (பழைய பதிப்பு) என்ற தனது நூலின் பக்கம் 399-ல் கரிவலம் வந்த நல்லூர், சீவலிபுத்தூர் ஆலயங்களில் உள்ள கல்வெட்டுகளில் தேவேந்திரகுலத்தாருக்கு உரியதாகக் கண்டுள்ள உரிமைகளைப் பறையருக்கு உரியதாகவும், பறையருக்கு உரியதாகக் கண்டுள்ள உரிமைகளைப் தேவேந்திர குலத்தாருக்கு உரியதாகவும், கண்டுள்ளார்,இதை இவ்வாறு மாற்றிக் கூறியிருப்பதற்குக் காரணம் தேவேந்திர குலத்தார் மூவேந்தர் மரபினர் என்ற உண்மையை மறைக்கவே ஆம்,இதை டாக்டர் கே.கே.பிள்ளைக்குச் சுட்டிக்காட்ட, அன்னார் என்னிடம் இது பற்றி விளக்கம் கேட்டு, மள்ளர் தேவேந்திர குல வேளாளர் என்ற பொருள் பற்றி தீர்க்கமாய் ஆராய்ந்து, தேவேந்திர குலத்தார்தான் மூவேந்தர் மரபினர் என்ற எனது முடிவுடன் ஆராய்ச்சியை நூல் மூலம் வெளியிடக் கேட்டுக் கொண்டார்.(டாக்டர் கே.கே.பிள்ளைக்கு நான் எழுதிய கடிதங்களும்,அன்னார் எனக்கு அனுப்பிய பதில்களும் மூவேந்தர் யார்?நூலில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்),ஆனால் மூவேந்தர் யார்? நூலுக்கு அணிந்துரை வழங்கும்படி நான் அன்னாரை அணுகிய காலை.மூவேந்தர் யார்? நூல் வெளி வந்தால் நாட்டில் குழப்பம் ஏற்படும் எனவும்.தான் யோசனை பண்ணிய பிறகுதான் நூலுக்கு அணிந்துரை நல்கலாமா? வேண்டாமா? என்பது பற்றிக் கூறமுடியுமென்றும்.நூலைத் தன்னிடம் விட்டுச் சென்று 10தினங்களுக்குப்பின் தன்னை வந்து சந்திக்கும்படி கூறினார்,பின் அவரைச் சந்திக்க. இது எப்படி வரலாறாகும், இந்திய வரலாறே முகமதியர் வருகைக்குப்பின் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது இன்றைய வேளாளரும் உழவர் குடிதானே, அவரையும் தேவேந்திர குலத்தாரோடு சேர்த்துக் கொள்ள வேண்டியதுதானே நான் அணிந்துரை கொடுக்க முடியாது. அரசியல்வாதிகளிடம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறித் தட்டிக் கழித்து விட்டார்.

நூல் அச்சில் இருக்கும்போது நடந்த இன்னுமொரு சம்பவத்தையும் ஈண்டு குறிப்பிட விளைகின்றேன், 1977-ல் தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு முன் திரு.எம்.ஜி. இராமச்சந்திரன், மாற்றுக்கட்சியினரால் மளையாளி என்று தாக்கப்படும்போது, தான் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மண்ணாடி வகுப்பைச் சேர்ந்தவன் என்றும் தனது முன்னோர் பிழைப்புக்காக அங்கிருந்து கேரளாவில் குடியேறியதாகவும் கூறிவந்தது பலரும் அறிந்ததே,மண்ணாடி என்ற குலப்பட்டத்தைக் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தேவேந்திர குலத்தாருள் ஒரு சாரார் தரித்து வருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது, இவர் (எம்.ஜி.ஆர்)தஞ்சாவூர் காலஞ்சென்ற யாகப்ப நாடார் மகன் சேவியரிடம்அறிஞர் அண்ணா.சென்னை கீழ்த்திசை கைப்பிரதி நூலகத்தில் (Madras Oriental Manuscript Library) ஒரு கைப்பிரதியில் தேவேந்திர குலத்தார்தான் மூவேந்தர் மரபினர் என்று கண்டிருந்ததைத் தான் படித்ததாகவும், ஆனால் இன்று முக்குலத்தோர் என்று கூறுபவர் தேவர் என்றகுலப்பட்டத்தைத் தரித்திருப்பதைக் கொண்டு -

தாங்கள்தான் மூவேந்தர் மரபினர் என்று பேசியும். எழுதியும் வருவதில் அர்த்தம் இல்லை என்று கூறியதாகவும். தேவேந்திரகுலத்தார் தான் மூவேந்தர் மரபினர் என்பதற்கு ஆதாரமிருந்தால். அதை என்னிடமிருந்து பெற்று அனுப்பிவைக்கும் படி தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும். இதுபற்றி என்னிடம் வினவ.இரு முதுநிலைப்பட்டதாரிகளை திருசேவியர்அனுப்பி வைத்தார்.ஆனால் நானோ இது சம்பந்தமாய் எனக்குத் தெரிந்தவரை நுல்ஒன்றும் வெளிவரவில்லை எனவும், நான் எழுதி அச்சில் இருப்பதுதான் முதல் நூலாய் அமையுமென்றும் அவர்களிடம் கூறி அனுப்பினேன்.

திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் 1977 - ல் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் அருப்புக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுத் தமிழக முதல் அமைச்சர் ஆனபின். அத்தொகுதியில் முதன் முதல் சுற்றுப்பயணம் செய்யுங்காலை,தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதி என்று கூறிவருபவர் சாதி வேற்றுமை பாராட்டித் தங்களைத் துன்புறுத்தி வருவதாக நூற்றுக்கணக்கான மனுக்கள் கொடுக்க,அன்னார் (எம்.ஜி.ஆர்) சாதி வேற்றுமை "ஒரு சாரார் அடிமைப்பட்டதன்" காரணமாய் ஏற்பட்டது, நான் என்ன சாதியைச் சேர்ந்தவன் என்று உங்களுக்குத் தெரியாது?ஆனால் என்னை உங்களில் ஒருவனாக மதித்து நடத்துகிறீர்கள், அதே போன்று எல்லோரிடமும் நடந்து கொள்ளுங்கள் என்று கூட்டத்தில் கூறலானார்.

**Mr.Ramachandran said: "Because of Bondage Cast Difference Crept In. Citing Himself as an Example Mr.Ramachandran said, "You Donot Know to What Caste I Belong to. I am One With All Of You. That is How Every One of You Should Be" (The Hindu Madural Edition Dated 12-10-1977 and The Indian Express Madurai Edition Date 12-10-1977.)**

நான் மூவேந்தர் யார்?நூல் வெளியிட்ட கையோடு சங்ககாலம் பற்றிய தமிழக வரலாறு எவ்வாறு எழுதப்பட்டு வருகின்றதென்பதை விசாரித்து வரலானேன்,தொல்பழங்காலம் என்ற முதற் தொகுதிக்குத் தலைவராக இருந்த டாக்டர், மு,வரதராசனார், அத்தொகுதி வெளியாகு முன்பே காலமாகிவிட்டார்,அன்னார் இடத்தில் திரு,ஔவை துரைசாமி பிள்ளை நியமனம் பெற்று வரலாற்றுக்குழு செயல்பட்டு வந்தது,ஔவை துரைசாமி பிள்ளையும் காலமாக அவரது இடம் உடனே நிரப்பப்படாமல் சிலகாலம் தலைவர்பதவி காலியாகவே இருந்து வந்தது,இக்காலியிடத்திற்கு ஒருவேளை டாக்டர் கே,கே,பிள்ளையை நியமனம் செய்து விடுவார்களோ என்ற ஐயத்தால் 7-5-78ல் தமிழக முதல்வருக்கு டாக்டர் கே.கே.பிள்ளையிடம் நான் மூவேந்தர் யார்?நூலுக்கு அணிந்துரை பெற அணுகிய போது அன்னார் என்னிடம் நடந்துகொண்டவிதம் பற்றி எடுத்துரைத்து. சங்ககாலம் பற்றிய தொகுதியில் மருதநில மள்ளர் குடியிலிருந்து மூவேந்தர் தோன்றினர் என்ற உண்மை இடம்பெற ஆவன 'செய்ய வேண்டுமென்று வேண்டினேன், அக்கடிதத்தின் மேல் வரலாற்றுக்குழுவின் செயலாளர் நான் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் கண்ட வரலாற்று உண்மையை ஆய்வு செய்யும் பொருட்டு எனது மூவேந்தர் யார்?நூலின் ஐந்து பிரதிகளை இலவசமாய் அனுப்பும்படி கோரினார்,(ந,க,எண், ஆ3)25464/78 நாள் 16-8-78)நான் அவர் கோரியபடி செய்ய நூல் பிரதிகள் பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாய் வரலாற்றுக்குழுச் செயலாளர் ஒப்புதல் தந்தார்.(ந.க.எண், ஆ3)25464/78 நாள் 29-8-78),

1980-ல் உலகத்தமிழ் மாநாடு கூட இருப்பதாக அரசு அறிவிப்புகள் வந்ததால். தமிழ் மாநாட்டில் வெளியிட உத்தேசித்திருக்கும் தமிழக வரலாறு மூவேந்த மரபு பற்றிய உண்மையை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு "வரலாற்று மாற்றங்கள் திருத்தப்பட வேண்டும்" என்ற



பொருள்பட ஒரு கடிதம் வரைந்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வாசகர் பகுதியில் வெளியிட அனுப்பி வைத்தேன். '"Distortions in History Must be Corrected" என்ற தலைப்பில் அது 2-10-1979-ன் மதுரை வெளியீட்டில் பிரசுரித்தது, தமிழக முதல் அமைச்சர், கல்வி அமைச்சர், தமிழக வரலாற்றுக் குழு இவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

"இதயம் பேசுகிறது" என்ற தமிழ் வார ஏடு 1980 ஆரம்பத்தில் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி இன்று நேற்று நாளை என்ற தலைப்பில் கட்டுரைகள் வெளியிட்டு வந்தது,அக்கட்டுரைகள் தொடர்பாக அதன் ஆசிரியர் வாசகர்களை தஞ்சை மாவட்டம் பற்றிக் கட்டுரைகள் எழுதி அனுப்பும்படி கோரினார், நான் சோழ நாட்டில் பண்டைய நாளில் ஏற்றமுற்று வாழ்ந்த மூவேந்தர் மரபினராகிய மள்ளர் குடியினர் இன்றையப் புதிய நிலப் பிரபுக்களிடம் பள்ளர் என்ற பெயருடன் பண்ணை அடிமைகளாய் உழன்று வருவதாய் ஒரு கட்டுரை வரைந்து அன்னாருக்கு அனுப்பி வைத்தேன்,அவர் தஞ்சை பெரிய கோயில்,உழத்தியர் நாற்று நடுதல், உழவர் களத்தில் கதிர் அடித்தல்,இவற்றில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் படம் பிடித்து "உலகம் ஆண்ட உழவர் சமுதாயம்" இன்று ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற தலைப்பில் 24-2-80 வெளியீட்டின் மையப் பகுதியில் அந்தக்கட்டுரையைத் தஞ்சை சிறப்பு கட்டுரையாக வெளியிட்டதுடன் எனது கட்டுரையில் கண்ட கூற்றுக்கு மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்க விரும்புவோர் எழுதலாம் என்ற வாசகர்களுக்கு அழைப்பும் விடுத்தார்.இக்கட்டுரைக்கோ இந்தியன் எக்ஸ்பிரசில் 2-10-79 ல் வெளியான கடிதத்திற்கோ எவ்வித மறுப்பும் இந்நாள் வரை வரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "இதயம் பேசுகிறது" ஏட்டில் வெளியான கட்டுரைபற்றி வரலாற்றுக் குழுவினற்கு 17-3-80ல் தெரிவிக்குமுகத்தான் மூவேந்தர் யார்?நூலில் கண்ட மூவேந்தர் மரபு பற்றிய முடிவை வரலாற்றுக்குழுவினர் ஏற்றுக்கொண்டார்களா? இல்லையா? என்று வினவினேன்.அதற்கு 'தங்கள் மூவேந்தர் யார்? என்ற நூலில் தெரிவித்துள்ள கருத்துகள் சங்ககாலம் தொகுதியில் வெளியிடப்பெறத் தேவையில்லை என வரலாற்று வல்லுனர் கருத்து தெரிவித்துள்ளனர் என வரலாற்றுக்குழுவினரிடமிருந்து பதில் வந்தது, (ந,க,எண், ஆ3) 8756/79 நாள் 17-4-80), இதுபற்றி மீண்டும் ஏன் எனது கருத்து வரலாற்றில் இடம் பெறத்தேவையில்லை? என வரலாற்றுக்குழுவினர் கருதுகின்றனர் எனக் கேட்க 'வரலாற்றுவல்லுநர் முடிவே இறுதியானது' என்று பதிலளித்தனர் (ந,க,எண், ஆ3)8756/79 நாள் 9-5-80), வரலாற்றுக் குழுவினரின் செய்கை பற்றி முதல் அமைச்சர், கல்வி அமைச்சர், இவர்களுக்கு எழுதினேன். ஆனால் அவற்றின் மேல் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

எனது முயற்சிகள் பலனளிக்காததால் 30-6-80-ல் தமிழக முதல் அமைச்சருக்கு நீண்ட கடிதம் எழுதினேன். அதில் டாக்டர் கே.கே. பிள்ளையின் நூல்களில் தேவேந்திர குலத்தாரைப் பற்றி எங்கெல்லாம் தவறான கருத்துகள் தெரிவித்திருக்கின்றாரோ, அவற்றையெல்லாம் தொகுத்து இத்தகைய ஒருவரை வரலாற்றுக்குழுவிற்குத்தலைவராக நியமனம் செய்தது சரியன்று என்றும். இம்மாதிரியான வரலாறு தமிழ் மாநாட்டில் வெளியிடக்கூடாது என்றும் தமிழகத்தில் அரசைத் தோற்றுவித்த மக்கள் யார்? என்பதை வரலாற்றில் குறிப்பிட்டால்தான் அது சரியான வரலாறாகும் என்றும் குறிப்பிட்டு இருந்தேன். அதோடு நிற்காமல்

உத்தேசித்த மாநாட்டில் தமிழக வரலாறு வெளி வராது எனத் தெரிந்ததால் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் படிப்பதற்கு ‘சங்க இலக்கியங்களில்’ வரும் மள்ளர்-மல்லர் யார்?என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்து 20-3-80ல் உலகத்தமிழ் மாநாட்டுத் தனி அலுவலர்க்கு அனுப்பி வைத் தேன். ஆனால் அக்கட்டுரையைப் படிக்க எனக்கு வாய்ப்புத் தரவில்லை, மாநாட்டு மலரிலும் அந்தக் கட்டுரை இடம்பெறவில்லை.

மூவேந்தர் யார்? நூலைத் தொடர்ந்து வேளாளர் யார்? என்ற ஒரு நூலை உலகத் தமிழ் மாநாடு கூடிய 4-1-1981ல் வெளியிட்டேன்,இதில் மருதநில மள்ளர் குடியினர்தான் சங்க காலத்தில் உழவர் என்றும். பின்னாளில் வேளாளர் வெள்ளாளர்என்றும் சிறப்பிக்கப்பட்டதாகவும். இக்கால வேளாளர் வெள்ளாளர் கலப்பினம் என்றும் அதில் கண்டுள்ளேன்,எனது 30-6-80 கடிதத்தை தமிழக அரசு டாக்டர் கே.கே.பிள்ளையின் பதிலுக்கு அனுப்ப அன்னார் தனது மரபைத் தாழ்த்தி எழுதியிருப்பதாகவும், தான் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்றும், தேசிய விநாயகம் பிள்ளைக்குச் சொந்தம் என்றும், அதை உயர்நீதி மன்றத்தில் நிரூபிக்கப்போவதாகவும் கூறி, என்மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் ரூ,50.100-க்கு மான நட்டம் கோரி அவதூறு வழக்குத்தொடர்ந்தார். இது விபரத்தையும் 16-3-82ல் தமிழக முதல்வருக்குத் தெரியப்படுத்தினேன். அக்கடிதத்தில் தமிழகச் சங்க காலம் பற்றிய வரலாறு அ.தி.மு.க அரசால் இருட்டடிப்புச் செய்யபட்டு விட்டதாக பின்னால் வரும் அரசு அதன்மீது குற்றம் சுமத்தும் என்றும் சுட்டிக்காட்டினேன்,இந்தக் கடிதத்திற்கு அரசிடமிருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை.

சங்ககால வரலற்றில் கொங்கு வேளாளர் இடம் பெற்றிருப்பது பற்றி முன்னர் குறிப்பிட்டிருப்பதைத் தங்களுக்கு இங்கு நினைவூட்டுகிறேன், ஏற்கனவே கூறியது போல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் இந்த மரபினர் செல்வாக்கு சில பல ஆண்டுகளாக மேலோங்கி வந்துள்ளது.ஒவ்வொரு சமூகமும் போலிக்குல உயர்வு காரணமாய் தம் தம் மரபை சமூக நிலையில் உயர்த்திக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதை நன்கு பயன்படுத்தி வருவது வழக்கமாய் இருந்து வருவது நாடறிந்த ஒன்று, முந்தையத் தி.மு.க ஆட்சியின்போது முக்குலத்தோர் 1972-ல் வெளியான இராமநாதபுரம் மாவட்டம் கையேட்டில்(Dt Manual) கள்ளர்,மறவர்,அகம்படியர், முக்குலத்தோர் என வழங்கு வதாகவும், அவர் தமிழ்த் தொல்குடியினர் எனவும், பாண்டியரின் முப்படை வீரர் எனவும் எழுதப்படத் தம் செல்வாக்கைப் பயன்படுத்தினார் என்பதுவும், ஈண்டு குறிப்பிடத்தக்கது.(இவர் தமிழ் தொல் குடியினர் என்பதற்கு சங்க இலக்கியங்களில் எவ்விதச் சான்றும் இல்லை)

ஏற்கனவே குறிப்பிட்டது போல் திரு.எம்.ஜி.இராமச்சந்திரன், தன்னை மண்ணாடி என்று கூறிவந்தவர். மூவேந்தர் யார்? நூல் வெளிவந்தபின் அதில் கோயம்புத்தூரில் வாழும் தேவேந்திர குலத்தாருள் ஒரு சாரார் மண்ணாடி என்பதைக் குலப்பட்டமாகக் கொண்டுள்ளனர் என்று கண்டிருந்ததால் தனது மூதாதையார் மன்றாடியார் வகுப்பு என்று மாற்றிக் கூற முற்பட்டார், இதை மக்களிடம் பரப்பக் கோவைச் செழியனைக் கொண்டு தனது பூர்வீகம் பற்றிய வரலாற்றை அ.தி.மு.க நாளேடான “அண்ணாவில்” தொடர் கட்டுரையாக எழுதச் செய்தார்.இவர் தன்னை மன்றாடியார் வகுப்பைச் சேர்ந்தவன் என்றுகூற முற்படவும், கொங்குவேளாளர் என்று கூறிவரும் கவுண்டர் இனத்தில் செல்வாக்குப் பெற்றவர் தஞ்சை தமிழ்ப் பல்பலைக் கழகத்தில் கல்வெட்டுத் துறையில் இணைப் பேராசிரியராகப் பணிபுரியும் புலவர் இராசுவைக் கொண்டு திரு.எம்.ஜி.ஆர். கொங்கு நட்டு மன்றாடியார் (கொங்கு வேளாளர்) வகுப்பைச் சேர்ந்தவர் என்ற முடிவுடன்



“செந்தமிழ்வேள் எம்.ஜி.ஆர்.” என்ற தலைப்பில் ஒருநூல் எழுதி அதை 1985 டிசம்பரில் சென்னையில் ஆடம்பரமாய் பெரிய மனிதர்களைக் கொண்டு வெளியிட ஏற்பாடு செய்தனர்.இந்நூலை அந்த ஆண்டின் சிறந்த வெளியீடாக மதிப்பிட்டு தமிழ் வளர்ச்சிக்குழு அதற்குப்பரிசு வழங்கியதுடன்,உடனே அனைத்து அரசு பொது நூலகங்களுக்கும் அதை வாங்க ஏற்பாடு செய்தனர், (மன்றாடி என்பது வேளாளரைக் குறிக்கவில்லை,சோழர்காலக் கல்வெட்டு களின்படி “மன்றாடி” என்பது இடையரைக்குறிக்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

புலவர் இராசு,எம்.ஜி.ஆரின் முன்னோர் மன்றாடியார் என்றும் அவர் கொங்கு நாட்டு வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் மண்ணாடி என்பது மன்றாடியின் திரிபு என்றும் வாதிட்டாலும். இவரது முடிவுக்கு மாறான உண்மைகள் அவரை அறியாமலே அவரது நூலில் வெளி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.“செந்தமிழ்வேள் எம்.ஜி.ஆர்.நூல்” பக்கம்46-ல் கண்டிருப்பதாவது பல மண்ணாடியார் குடும்பங்கள் கொங்கு நாட்டிலிருந்து குடியேறினதாகக் கூறுகின்றனர், ஆனால் பாலக்காடு நகரில் குடியேறியுள்ள தேங்குறிச்சி புளியங்குளத்து மண்ணாடியார் சோழநாடு தஞ்சையிலிருந்து வந்ததாகக் கூறுகின்றனர். அங்குள்ள அம்மணி மருவம்மா என்ற 90வயதுள்ள பெண்மணி கூறியதாவது, “உழவர்களாக இருந்த நாங்கள் எல்லாம் கிழக்கே வெகு தூரத்திலிருந்து கேரளத்துக்கு வந்தோம். சோழன் ஆட்சிபுரிந்த சோழ நாட்டிலிருந்து குடியேறினோம்,அங்குள்ள கிழக்குச் சீமையாகிய தஞ்சாவூர் சீமைதான் எங்கள் பூர்வீகம், நாங்கள் வேளாளரில் சத்திரியர் இங்கு உழவர்குடி என்பதோ வேளாளர் வேளாளரில் சத்திரியர் என்று கூறுவதோ தேவேந்திர குல வேளாளரையே குறிக்கும்” என்பது வெள்ளிடை மலை,மூவேந்தர் ஆட்சி வீழ்ச்சிக்குப்பின் அந்நிய ஆட்சியாளரின் அடக்கு முறைக்குப் பயந்து மூவேந்த மரபினராகிய தேவேந்திர குலத்தார் தமிழகத்தை விட்டு வேற்று இடங்களுக்குப் பிழைப்புக்காகச் சென்றனர். என்றால் அது ஒப்புக்கொள்ளத் தக்க ஒன்றேயாம். திரு.எம்.ஜி.ஆர்.ஆரம்பத்தில் கூறிவந்தபடி அவரது முன்னோர் மண்ணாடி என்றே வழங்கி வருகின்றனர். இதன் காரணமாகவே மாற்றுக் கட்சியார் அவரை மலையாளி என்று குறிப்பிட்ட போது தன்னை மண்ணாடி என்றும், தம் முன்னோர் கோயம்புத்தூர் பகுதியிலிருந்து கேரளாவில் குடியேறினார் என்றும் தன்னைத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் என்றும் உரிமை பாரட்ட முற்பட்டார். மண்ணாடி என்றகுலப்பட்டம் தேவேந்திர குலாத்தாருக்கு உரிய ஒன்று என்றும், அவர் மூவேந்தர் மரபினர் என்றும் தெரிந்துதான் அவ்வாறு கூறிவந்தார் என்பது சொல்லாமலே விளங்கும். அதோடு அதை உறுதிப் படுத்திகொள்ள நான் மூவேந்தர் மரபு பற்றி ஆராய்ந்து வருவதைக் கேள்விப்பட்டு. அதுபற்றிய முழு உண்மையையும் தெரிந்துகொள்ள எனக்கு அவர் ஆள் அனுப்பினார், அவரிடம் (எம்.ஜி.ஆர்) மூவேந்தர் மரபு பற்றி அறிஞர் அண்ணா சொன்னதை, திரு.சேவியரிடம் கூறினதுவும் நினைவு கூரத் தக்கது. நூலில் மண்ணாடி என்றகுலப்பட்டம் கோயம்புத்தூர் மாவட்டம் தேவேந்திரகுலத்தாருள் ஒரு சாரார் தரித்து வருவதாகக் கண்டுள்ளதால். அரசியல் காரணமாய் தான் மன்றாடி வகுப்பைச் சேர்ந்தவன் என்று மாற்றிக் கொண்டார் என்பது அறியத்தக்கது.

இது ஒருபுறம் இருக்க. கொங்கு வேளாளர் தங்கள் சமூக நிலையை உயர்த்திக் கொள்ள திரு. எம்.ஜி.ஆர். மன்றாடி என உரிமை பாராட்டியதைப் பயன்படுத்தி அவரை (எம்.ஜி.ஆர்) ‘செந்தமிழ்வேள்’ என உயர்த்தி அதன் மூலம் கொங்கு வேளாளர் என்போரும் வேளிர் வகுப்பைச் சேர்ந்தவர்

என்று நிலைநாட்ட இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர், இதற்காக இச்சமூகத்துப் பிரமுகர்கள் பலர் பெரும் முயற்ச்சி எடுத்துக் கொண்டிருக் கின்றனர், என்பது செந்தமிழ்வேள் எம்.ஜி.ஆர். நூலைப் படிப்போர் ஆறிவர்.

இனி சங்ககால மூவேந்தர் தொன்மை பற்றிக் கூறுகின்றேன். சங்ககாலம் அரசியல் பக், 183-ல் இராமாயணத்தில் *சீதையைத்* தேடிச் சென்ற வானர வீரனுக்குச் சுக்கிரீவன் வழித்துறைகளை வகுத்துரைக்கும்போது சோழ, சேர, பாண்டிய நாடுகளைக் குறிப்பிடுகிறார் என்றும் உதிட்டிரன் இராசசூய வேள்வி வேட்டபோது சோழ, சேர, பாண்டியர், மூவரும் வந்திருந்ததாக வியாசர் கூறுகிறார் என்றும் கண்டுள்ளது. அரசியல் பக், 257-ல் பாணினியின் இலக் கணத்திற்கு உரை எழுதிய கார்த்தியாயனர் சோழர் என்றபெயரை எடுத்துக் காட்டியதாகக் கண்டுள்ளது, அரசியல் பக்கம் 1-ல் வால்மீகி தமது இராமாயணத்தில் *சீதையைத்* தேடச் சென்றவானரரை நோக்கிச் சுக்கிரீவன் பொதிகை மலையில் அகத்திய முனிவரின் தமிழ்ச் சங்கம் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். சின்னமனூர்ச் செப்பேட்டில் பாண்டியன் அகத்தியனோடு வடமொழியையும் தென் மொழியையும் பழுதற ஆராய்ந்தான் என்றும், பாண்டியனுக்கு அகத்தியன் புரோகிதனாக இருந்தான் என்றும் கண்டுள்ளது. அரசியல் பக்கம் 288-ல் வரலாற்றுக் காலச் சோழ அரசர்களின் மூதாதையர் தெய்வீகத் தன்மையுடையவர்களரகவும். அற்புதச் செயல்கள் புரிந்ததாகவும் சிலப்பதிகாரம், மணிமேகலை கூறுவதாகவும் எட்டுத்தொகை நூல்களிலும் இதுபற்றிக் குறிப்புகள் அருகிய வழக்குடையவையாக உள்ளதாகவும் காந்தமன், சுகந்தன், சிபிச் சோழன், முசுகுந்தன், மனுச்சோழன், தொடித்தோட் செம்பியன் இவர்கள் புராணகாலச்சோழர் எனவும் கண்டுள்ளது, அரசியல் பக்கம் 384-87-ல் வடிவம்பலம் நின்றபாண்டியன், இந்திரன் ஆரம் பூண்ட பாண்டியன். மழை பிணித்தாண்ட மன்னன். பொற்கைப்பாண்டியன். தடாதகைப் பிராட்டியார் இவர்களைப் பற்றிப் புராணக் கதைகள் கூறுவதாகக் கண்டுள்ளது, இராமாயணத்தில் பாண்டியரது தலைநகர் பொன்னாலும், முத்தாலும் அலங்கரிக்கப்பட்ட கோட்டை வாயிலையுடையது என்றும் கூறப்பட்டுள்ளது, வியாசர் பாரதத்தில் பாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனன். பாண்டியர் குலப் பெண்மணியை மனந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது, அரசியல் பக்கம் 386-87-ல் மலையத்துவசப் பாண்டியன் காஞ்சனை என்ற பெயருள்ள பாண்டிய தேவியோடு வாழ்ந்தான் என்றும். இவ்விருவருக்கும் தடாதகைப் பிராட்டியார் என்றமீனாட்சி பிறந்ததாகவும். அப்பெண் பாண்டிய நாட்டை அரசாண்டாள் என்றும் கூறுகிறது. மேலும் மலையத்துவசப் பாண்டியனைப் பற்றி பாகவத புராணம் மற்றொரு வரலாற்றைக் கூறுவதாகவும் கண்டுள்ளது. பாண்டியர் இலக்கியங்களில் 'கௌரியர்'' என்று அழைக்கப்படுவது சிந்திக்கத்தக்கது, கௌரியர் சித்திராங்கனுடைய மகளாகிய சித்திராங்கதையின் வழித்தோன்றல் என்றும் கூறுவர், பாண்டியர்க்குக் கௌரியர் என்றபெயரைப் போன்று ''பஞ்சவர்'' என்ற பெயருமுண்டு (அரசியல் பக்கம் 226-527-529) கௌரியர் என்றபெயர் துரியோதனருக்கு உரியது போல ''பஞ்சவர்'' என்பது பஞ்ச பாண்டவருக்கு உரித்தானது, 'ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தொழிய' என இலக்கியத்தில் வரும் ஈரைம்பதின்மர் கவுரியரைக் குறிப்பதாயுள்ளது, எனவே பஞ்ச பாண்ட வருக்கும் துரியோதனாதியருக்கும் இடையே நடந்த போர் சங்க இலக்கியத்தில் பேசப்படுகிறது, இந்தப்போரில் சேரமான் உதியஞ்சேரலாதன் இருதரத்தாருக்கும் உணவு வழங்கினான் என்றும் இலக்கியத்தில் கூறப்படுகிறது, ஆனால் அரசியல் பக்கம் 526-ல் ''பஞ்சவர் கௌரியர்'' என்போர் பாண்டியரில் கிளைக்குடியினர் என்றும். இந்த இருசாராருக்குமிடையே நடந்தபோரில் இருசாரார்க்கும் சேரன்



உணவளித்திருக்கலாம் என்றும் விசித்திரமான பொருள் கண்டுள்ளனர். ''பஞ்சவர்'' என்பதற்கு ''பஞ்ச திராவிடர்'' என்றும், பஞ்சநதிப் பகுதியை ஆண்டவர் என்றும் பொருள் கொள்ளலாம், பாண்டியரைப் ''பஞ்ச திராவிடர் முதல்வன்'' என்று கூறுவது தமிழ் மரபு, பஞ்ச திராவிடர் என்பது குசராத்தியர், மராட்டியர், கன்னடர், தெலுங்கர், தமிழர் ஆக ஐவரைக் குறிக்கும் என்பர். சங்க இலக்கியம்பாண்டியனைப் பஞ்சவர் ஏறே என்று கூறுவது பஞ்ச திராவிடருள் சிங்கம் போன்றவள் என்று பொருள்படும். சங்க இலக்கியங்களில் இராமன் பெயர் காணப்படுகிறது, சிலப்பதிகாரம் பாண்டியன் நெடியோனை வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென் திசையாண்ட தென்னவன் வழி என்றும். இச்சவாகு கோத்திரம் என்றும் கூறுவர், பாண்டியரைத் திங்கள் குலத்தவர் என்றும் சேரரை அக்கினி குலத்தவர் என்றும் கூறுவர், சிந்துவெளி நாகரீகத்தைத் தோற்றுவித்தவர் திராவிடர், அங்கு பேசப்பட்ட மொழி தமிழை ஒத்தது. இந்திய நாகரீகம், திராவிட நாகரீகம், திராவிட குழுவைச் சேர்ந்த மொழிகள் பல இன்னும் வடநாட்டில் பேசப்பட்டு வருகின்றன.''ருக்கு'' வேதத்தில் பல தமிழ் சொற்கள் வழங்குகின்றன, பாரதம். இராமாயணத்தில் தமிழ் வேந்தர் பேசப்படுகின்றனர். பாண்டியர், கவுரியர், பாண்டவர் (பஞ்சவர்) வழித்தோன்றல்கள் என்றெல்லாம் பொருள்படும்படி தொல்பழங்காலம் கூறும், இக்கூற்றுக்களுக்கெல்லாம் முரணாக சங்க காலத் தொகுப்பில் முடிவுகள் அமைந்துள்ளன, இராமன் திராவிடரைப் போன்று ''கரிய நிறமுடையவன்'' என்றும் அதனால் அவன் திராவிடராகத் தான் இருக்கமுடியுமென்றும் பல அறிஞர் அபிப்பிராயப்படுவதைப் பலரும் அறிவர்.

பண்டைய இந்தியாவில் 16 குடியரசுகள் இருந்ததாகவும், அவற்றுள் ஒன்று மல்லர்/மள்ளர் குடியரசு என்றும் இந்திய வரலாறு கூறும். கௌதம புத்தர் மல்லர் குடியரசிலேயே தமது இறுதி நாட்களைக் கழித்ததாக வரலாறு கூறும், அவரும் மகாவீரரும் மல்லர் குடியைச் சேர்ந்தவர் என்றே கருத வேண்டியுள்ளது, ஆரியப்பண்பாட்டை இவர்கள் எதிர்த்து வந்துள்ளனர். அலெக்சாண்டர் சிந்து பகுதியின் மீது படை எடுத்த காலை. வயலில் வேலை செய்து கொண்டிருந்த மள்ளர்/மல்லர் ஆயுதங்களைக் கையிலேந்தி அவரது படையை எதிர்த்ததாகக் கிரேக்க வரலாறு கூறும், வடமேற்கு இந்தியாவில் திராவிட குழுவைச் சேர்ந்த பிராகுவி மொழி இன்னும் பேசப்படுகிறது என்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுவர், பஞ்சாபில் மல்தான் என்னும் நகரில் சூரியனுக்குப் பழைய கோயில் ஒன்று இருந்ததென்றும், அதில் இருந்த சூரியக் கடவுளின் பழைய கோயிலை ஔரங்கசீப் இடித்து. அதன் தங்க உருவச்சிலையை உருக்கி கருவூலத்தில் சேர்த்ததாகவும். மல்தான் என்றஇடம் மல்லர்/மள்ளர் வாழ் இடமாய் இருந்தது என்றும் இந்தியாவின் வடமேற்குப் புறத்தில் இவர் முதன்மையான சாதியினராவர் என்றும். தமிழருள் ஒரு பிரிவினராகிய இவர்கள் மால்வ எல்லைக்குட்பட்ட நாடுகளிலும். இராசஸ்தானிலும் காணப்பட்டனர் என்றும். பள்ள என்பது மள்ள என்பதன் உச்சரிப்பு வேறுபாடு என்றும். சௌராஸ்டிரத்தில் வாழும் சாதியாருக்கு இப்பெயர் வழங்கும் என்றும் அங்கு சூரிய வழிபாடு அவ்வழிபாட்டுக்குரிய பல கோயில்களும் இருந்தன என்றும் பண்டித சவுரிராயர் கூறுவார், (மூவேந்தர் யார்? பக்கம் 55. 56) மகாராட்டிரம் என்பது மல்லராட்டிரம் என்பதன் திரிபு என ஜி.ஒப்பர்ட் கருதுகிறார். மல்லேஸ்வரர், மல்லேஸ்வரி பெயர்களால் ஆலயங்கள் மகாராட்டிரம் மற்றும் வட இந்தியாவின் சில இடங்களில் இருப்பதாகத் தெரிகிறது. கர்நாடகத்தை சங்க காலத்தில் மள்ளர் ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. சாளுக்கியரும் (ஆந்திர நாட்டை ஆண்டவர்) மல்லர் மள்ளர்குடி என்பது, பல சாளுக்கிய மன்னர்கள் மல்லன் என்றபட்டம் தரித்திருந்ததிலிருந்து அறிய வருகிறது. அரசியல் பக்கம் 452-ல் சாளுக்கியர் வேளிர் என்று பிங்கல நிகண்டும்.

வேள் புல அரசர்கள் என்று திவாகரமும், வேள் குலச் சாளுக்கர் என்று சோழர் காலக் கல்வெட்டுகளும் கூறுவதாகக் கண்டுள்ளது காண்க, (வேள். வேளிர் மள்ளர் குடியினரே ஆம்), பல்லவரும் மல்லர் குடி என்பது அவர்கள் தரித்திருந்த மல்லன் பட்டத்திலிருந்து தெரிய வருகிறது.

சமீப காலமாய் சில வரலாற்றாசிரியர் மேலே கண்ட கருத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது, சொல்லின் செல்வர் ஆர்.பி. சேதுப்பிள்ளை தமிழினத்தைப் பற்றிக் கூறுவதைக் காண்போம், தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அதற்கொரு திறம் உண்டு, அத்திறம் முன்னாளில் தலை சிறந்து விளங்கிற்று. மன்னும் இமயமலை எங்கள் மலையே என்று மார்தட்டிக் கூறினான் தமிழன், கங்கையும் காவிரியும் எங்கள் நதியே என்று இறுமாந்து பாடினான் தமிழன். பஞ்சநதி பாயும் எந்தைத் திருநாடு எங்கள் நாடே என்று நெஞ்சம் நிமிர்ந்து பேசினான் தமிழன், ஆண்மை நிறைந்த தமிழன், அவன் வாளாண்மையால் பகைவரை வென்றான், தாளாண்மையால் வன்னிலத்தை மென்னிலமாக்கினான் வேளாண்மையால் வளம் பெருக்கினான், எல்லைப் புறத்திலுள்ள பெலுச்சியர் நாட்டிலே தமிழ் இனத்தைச் சேர்ந்த மொழி யொன்று இன்றளவும் வாழ்கிறது, உயர்ந்தவர் தாழ்வார், தாழ்ந்தவர் உயர்வார், இஃது உலகத்து இயற்கை. அந்த முறையில் படிப்படியாகத் தாழ்ந்தான் தமிழன், வளமார்ந்த வடநாட்டை வந்தவர்க்குத் தந்தான், தென் நாட்டில் அமைந்து வாழலானான். சொல்லின் செல்வர் தமிழரின் இன்றைய நிலைபற்றி மேலும் கூறுவதாவது. "அன்று நாற்றிசையும் ஏற்றமுற்று வாழ்ந்த தமிழ்நாடு இன்று ஊக்கமிழந்து உறங்குகின்றது, மன்னரும் மதிக்க வாழ்ந்த மறக்குலம் இடைக் காலத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டது. அக்குல வீரரது முறுக்குமீசை உருக்குலைந்தது, பணைத்த தோள் பதங்குலைந்து. மாற்றார் தலை பறித்த மறவரது நெடுங்கரம் இன்று கழனியில் களைபறிக்கின்றது" (தமிழர் வீரம்).

இவ்வாறெல்லாம் இருக்க. வரலாற்று வல்லுநர் உண்மைகளை மூடி மறைத்து தமிழ் மூவேந்தர் யாரோ? எவரோ? என்று கூறத்தக்க முறையில் வரலாற்றைப் படைத்திருக்கின்றனர், அவரது கூற்றுக்களில் முரண்பாடுகள் மலிந்திருக்கின்றன, மூவேந்தர் யார்? நூலை ஆய்வுக்கு என்னிடமிருந்து வர வழைக்கும். வரலாற்றுக் குழுவினரின் முறைகேடான போக்கு பற்றி தமிழக அரசுக்கு முறையிட்டும் சங்க கால வரலாற்றைமீண்டும் இருட்டடிப்புச் செய்து விட்டனர், மூவேந்தரும் மள்ளர் குடி என்பதைக் கண்டு கொள்ளாமல். பாண்டியர் மட்டும் மள்ளர் குடியைச் சேர்ந்தவர் எனவும். இக்காலப் பள்ளர் மள்ளர்குடி என்பது தங்களை (பள்ளரை) குறிப்பதாகக் கூறுகின்றனர் எனவும். ஆனால் இக்கூற்று ஏற்கத் தக்க ஒன்று இல்லை எனவும். வரலாற்றில் கண்டுள்ளனர், இவர்கள் நேர்மையானவர் எனில். எனது மூவேந்தர் யார்? நூலை ஆய்வுக்குக் கொண்டு வந்து. அதன் கருத்துக்கள் ஏற்கத் தக்கதல்ல என்று கூறியிருப்பர், அவ்வாறு செய்யாதது வியப்புக்குரிய ஒன்றாகும், மூவேந்த மரபினராகிய மள்ளர் குடியினரை சோழ பாண்டிய நாட்டில் பள்ளர். காலாடி அரிசன் என்றும். சேர நாடாகிய இன்றையக் கேரளாவில் செருமான், புலையன், என்றும் பெயர் மாற்றம் செய்து அடிமைப்படுத்தி தாழ்த்தப்பட்டவராகவும். கீழ் சாதியாகவும், தீண்டப்படாதவராகவும் இன்று உயர் சாதியினர் என்று உரிமை பாராட்டுபவர் நடத்தி வருவது கேலிக் கூத்தாகும். மூவேந்தர் யார்? நூலுக்கு அணிந்துரை வழங்கிய டாக்டர் கி.ர.அனுமந்தன் தமிழ்நாட்டில் பள்ளர் என்ற தலைப்பில் மூவேந்தர் யார்,? நூலை மையமாகக் கொண்டு 1982-ல் ஈரோடு வாசுகி கலைக்கல்லூரியில் நடைபெற்ற தென் இந்திய-



வரலாற்றுக் கருத்தரங்கில் ஒரு கட்டுரை படித்தார், சேரநாட்டை ஆட்சி செய்த சேரரின் முன்னோராகிய மள்ளர் குடியினர் கேரளாவில் இன்று புலையர். செருமான் என வழங்கப்படுவதாக "கேரளாவில் செருமான் புலையர்" என்ற தலைப்பில் நான் ஒரு கட்டுரை படித்தேன், இந்த இரு கட்டுரைகளும் தென்னிந்திய வரலாற்றுக் கருத்தரங்கு நடவடிக்கைகளில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இப்படியெல்லாம் இருக்க வரலாற்றாசிரியரும்.. தமிழ்புலவர்களும் இவைகளை பார்வைக்கு எடுத்துக்கொள்வதில்லை. டாக்டர் கே, கே, பிள்ளையின் "தமிழக வரலாறும் பண்பாடும்". என்றநூலையே மேற் கோளாகக் கொண்டு வரலாற்றாசிரியர் எழுதி வருகின்றனர், சமீப காலத்தில் கேசவன் என்றஒரு தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளையையும் மிஞ்சி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னார் உழுப்பறையராயிருந்தவர். நாயக்கர் ஆட்சி காலத்தில் பள்ளர் தேவேந்திர குலத்தார் எனப்பெயர் மாற்றம் பெற்றனர் என்றமுடிவுடன் பள்ளு இலக்கியம், ஒரு சமூக இயல் பார்வை என்றநூலை எழுதியுள்ளார். இந்த நூல் 1981-ல் மூவேந்தர் யார்? வேளாளர் யார்? என்ற இருநூல்களும் வெளிவந்தபின் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த கேசவன் நூலைப் பின்பற்றி பல ஆசிரியர்களும் பள்ளர் பறையரிடமிருந்து பிரிந்தவர் என்று தங்களது நூல்களில் எழுதியவர முற்பட்டிருக்கின்றனர், இவர்கள் அரசு ஊழியர் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ளவர்கள் போக்கு எவ்வாறிருப்பினும். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சங்க இலக்கியத்தில் வரும் மள்ளர் தான் இன்று பள்ளர் என வழங்குவதாக தமது எழுத்துக்களில் கண்டுள்ளதாகவும் அதற்கு மேற்கோளாக பல நூல்களுடன் மூவேந்தர் யார்? நூலையும் எடுத்தாண்டிருப்பதாகவும் கேள்வியுறுகிறேன், அடுத்து குங்குமம் ஏட்டில் "வெளிவந்த பண்டார வன்னியன்" கதையில் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் படைத் தலைவர்களில் ஒருவனாகிய சுந்தரலிங்கக் குடும்பன் அன்று தாழ்த்தப்பட்ட தேவேந்திரகுலம் என்றும். அவன் பாண்டிய மண்ணின் உரிமைக்காகப் போராடிய வெட்டும் பெருமாள் மரபில் வந்தவன் என்றும் எழுதியிருப்பது தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர் மரபினர் தேவேந்திர குலத்தார் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வதாக அமைந்துள்ளது, மனநிறைவைத் தருவதாக உள்ளது, வெட்டும் பெருமாள் என்பவன் நாயக்கருடன் இறுதியாகப் போர் புரிந்த பாண்டியராகிய ஐவர் இராசாக்களின் தலைவன் ஆவான் என்பது குறிப்பிடத்தக்கது.

தி.மு.க. அரசு தமிழக வரலாற்றைமுறையாக எழுதி வெளியிடத் தவறி விட்டதாக அ.தி.மு.க. குற்றம் சாட்டியதுபோல். அ.தி.மு.க. அரசு மீது அதற்குப்பின் ஆட்சிக்கு வரும் அரசு குற்றம் சுமத்தும் என 16-3-82-ல் அன்றைய தமிழக முதல்வர் அமைச்சருக்கு எழுதியதாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவூட்டுகிறேன். அன்று எழுதியது புலவர் திரு, கே. கோவிந்தன் அவர்களின் பேச்சால் நிறைவு பெறுவதாகவுள்ளது. எனவே தமிழக முதல்வர் சங்ககாலம் பற்றிய வாழ்வியல். அரசியல் என்றஇரு பகுதிகளையும் திரும்பப்பெற்று. தமிழகத்தில் மலிந்துள்ள சாதி வேறுபாடு. ஏற்றத்தாழ்வு இவைகளை அறவே போக்குமுகத்தான். தமிழகத்தின் சங்ககால வரலாற்றைதக்க நிபுணர்களைக் கொண்டு மீண்டும் எழுதி வெளியிட ஆவன செய்யப் பணிவுடன் வேண்டி இத்துடன் முடிக்கின்றேன்.

இவண்: ஒப்பம், இரா. தேவஆசீர்வாதம்



**குறிப்பு: இக்கடிதத்திற்கு தமிழக அரசிடமிருந்து எவ்விதப் பதிலும் இதுவரை வரவில்லை**

# அறிஞர் தேவ ஆசிர்வாதம் கடிதங்கள்

## ஜெயலலிதாவுக்கு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான சமூகத்திற்கு வணக்கம் பல.

ஓராண்டுக்கு முன்பு தங்களின் மேலான சமூகத்திற்கு தமிழகத்தைப் பன்னெடுங் காலமாய் கோலோச்சிய திராவிடப் பெருங்குடியினரின் வரலாற்று நூல்கள் ஐந்தை அனுப்பி வைத்தேன், அந்நூல்கள் மீது தாங்கள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை, தங்களது அமைச்சரவையில் இந்த இனத்தவருக்கு ஆதிதிராவிடர் இலாகாதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது, திராவிடப் பெருங்குடியினருக்கு இந்த இலாகா தான் கொடுக்கப்படவேண்டுமா? தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்க அந்நியருக்கு உதவிய இனத்தவருக்கு ஆட்சியில் முக்கிய பங்கு வழங்கப்பட்டுள்ளது, அ.தி.மு.க. தி.மு.க. ஆட்சியில் தமிழக வரலாறு பற்றி எழுதிய கடிதங்கள் கோட்டையில் தேடுவாரற்று முடங்கிக் கிடக்கின்றன, நான் கோர்ட்டுக்கு சென்று பரிகாரம் தேட எனது வயது இடம் தரவில்லை

கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தனது குடும்பத்தில் எல்லா சமூகத்தினருடன் மணஉறவு கொண்டிருப்பதாகவும் அதில் ஒருவர் தலித் என்றும் கூறுகிறார், இவர் யார்? என்பது மக்களுக்குத் தெரியாதா? தலித் என்பவர் மூவேந்தர் மரபினராகிய தேவேந்திரர் என்பதையும் மக்கள் அறியாதவர், சாதிகள் ஒழிய தமிழர் வரலாற்றை வெளிப்படுத்துவது நல்லது, ஏதேதோ செய்து வருகிறீர்கள், இதையும் செய்யமாட்டீர்களா?

நன்றி இவண்:

தேதி:23.06.2004

இரா,தேவ ஆசிர்வாதம்
மூவேந்தர் இல்லம். 12/180 யாகப்பா நகர். தஞ்சாவூர்-613 007,

---

## கருணாநிதிக்கு

பெறுநர்: உயர்திரு முன்னாள் தமிழக முதல்வர்

கலைஞர் கருணாநிதி அவர்கள் மேலான சமூகத்திற்கு வணக்கம் பல

ஐயா,

தாங்கள் தங்கள் குடும்பத்தில் எல்லா சமூகத்திற்குடனும் மண உறவு கொண்டிருப்பதாகப் பெருமைப்படுகிறீர்கள்,அந்த எல்லா சமூகத்தினருள் தலித் இனமும் அடங்கும் என்கிறீர்கள், அந்த தலித் இனம் என்று கண்டிருப்பவர் தமிழகத்தைப் பன்னெடுங்காலமாய்க் கோலோச்சி வந்த திராவிட தமிழ் பெருங்குடியினராகிய தேவேந்திர குலத்தார் என்பதைத் தாங்கள் அறியாததா? அந்தப் பெருங்குடியினரை தலித் என்று இழிவாய்க் குறிப்பிடுவது குறளோவியம் கண்ட தங்களுக்கு அடுக்குமா? இத்தருணத்தில் தங்களை திரு.எம்.ஜி.ஆர், குச்சிப்பிடி நடனக் கோஷ்டி என்று கூறியது மறந்துவிட்டீர்களா? தாங்கள் மருத்துவர் வகுப்பு என்று அந்த வகுப்பார் கூறி வருவதுவும் தமிழகம் நன்கு அறியுமே, தமிழக வரலாற்றை வெளிப்படுத்த நான் தங்களுக்கு எழுதிய கடிதம் குப்பைத் தொட்டியில் போடப்பட்டு உள்ளது, கணம் மோகன் தலைமையிலான கமிட்டி அறிக்கையில் சிலைகளை அருங்காட்சியகத்தில் வைக்க சிபாரிசு செய்தது என்ன ஆனது ?

தாங்கள் அரசியல் பண்ணுவது எல்லாம் சுயநலம்,

தேதி:23.06.2004

இரா,தேவ ஆசிர்வாதம்
மூவேந்தர் இல்லம். 12/180 யாகப்பா நகர். தஞ்சாவூர்-613 007,

---

# Moovendar - Race

[Letter Correspondence by the author with Dr. K.K. Pillay (Historian)On Moovendar race]

From R. DEVAASIRVATHAM,
180, Yagappa Nagar

Thanjavur
4-5-1976.

To Dr. K.K. PILLAY,
Retired Professor & Head of the
History Department,
Madras University,
Chepauk, Chennai -5

Dear Sir,

I had occasion to go through your work "தமிழக வரலாறு மக்களும்; பண்பாடும்' at page 399 of which, it is mentioned that a quarrel arose between Devendra kudumbars and Parayars over the use of certain privileges and as a result of the same, the Parayars were conferred certain privileges like the use of white elephant, white parasol, sixteen pillars pandal, eighteen musical instruments etc. I feel the matter has been misreported. According to Karivalam Vandanallur temple inscription, the above privileges belonged to Devendra Kudum bars from time immemorial and that Tirumalai Nayakkan just recognised the same after verifying old copper plates and as regards the Parayars, he conferred on them a few privileges like the use of three pillars Pandal, one Kodukku, one marappu etc. Prof. K.R. Hanumanthan, Head of the History Department, Presidency College Chennai, has also mentioned like that in his work 'Untouchability in Tamillagham', a thesis submitted to the Madras University for Ph.D. I hope the facts will be verified again and error if any corrected when reprint of the work is taken up.

I am making a study about the Moovendar race and according to my findings, Devendra kula velalars whom the caste people contemptuously call as pallans and who figure as Mallars in the Sangam literature are the people who produced the Chera, Chola, Pandya Kings both during the Sangam and the latter period. This is just for your information.

Yours Sincerely,

With regards. (Sd.) R.D. Asirvatham

---

K.K. Pillay,
M.A., D.Litt.,
D.Phil (Oxon)
Director

Institute of 'Traditional Cutltures,
University Buildings, Chennai-5.
15-5-76

Sir,

I thank you for your letter of 4-5-76. I am sorry for the delay in replying to your letter. I was out of station for a time.

I am much interested in the question raised by you; viz the conflict between the Devendra Kudumbar and Parayar. My information is based on records in the Tamil Nadu State Archives, Egmore. But if more reliable information is available, I shall be happy to look into it. Kindly let me know the Epigraphic report in which the concerned Karivalam Vandanallur temple inscription is published.

I am interested in writing the social history of the Tamils in an objective manner. Therefore any new and authentic piece of information is welcome.

I would also like to know the connection between the Devendra Kula Velalar and the Chera, Chola, Pandyas of the Sangam period.

Thanking you,
Please reply me,
Yours Sincerely,
(Sd.) K.K. PILLAY.

---

To
Thiru. R. DEVA ASIRVATHAM,
Retired Dy Collector,
180, Yagappa Nagar,
Thanjavur.

R. DEVA ASIRVATHAM
180, Yagappa Nagar.

Thanjavur,
24-5-76.

Dear Sir,

Received your letter dated 15-5-76. For Karivalam Vandanallur Culvert, you may please refer to inscription No. 432/1914, published in the South Indian Temple inscriptions Part II (Tinnevelly District, Sankaranayinar Koil Taluk). Devendra Kudumbars or Devendra Kula Velalars are none-else than Mallars, the people of Marudanilam, who founded the three Tamil Kingdoms-Chera, Chola, Pandyas and after the Kalabhra interregnum, they again came to power. After subjugation by the Vijayanagar rulers, they were persecuted and degraded as Pallars by the composition of a large number of pallu songs. The poligar system was introduced only with a view to depriving these people of their land holdings. Because of their liberality, these people were called as velalars and in latter medieval period as Vellalars. When Various sections drawn from Kurinji, Mullai and Neidal regions, who gained in social status began to style themselves as Vellalars, the original Vellalars assumed the title of Devendra Kulathar - Devendran, Indran, Purandaram all meaning Vendan, the god of Marudanilam. All the Tamil Scholars have deliberately distorted the literature and grammar etc., with the result, historians have not hither to been able to find out the tribe which ruled over Tamil Nadu during the Sangam and the latter period. Historians are confusing themselves with the words Marari. Tirayan and Vanavan.All the Tamil kings were from Mallars only. The study about Mallars has been neglected by scholars. This tribe should have been responsible for the Harappa Civilisation. They have offered resistance to Alexander. They had a republican form of Government during Buddha's period and Buddha is said to have breathed his last in the kingdom of the Mallars. In Nepal also, the Mallars were in power till in 17th century A.D. or so. Whether the Harappa and Adichanallur Civilisation were simultaneous or one preceded the other, is a matter for study by research scholars.

After overthrow by the Nayaks, Devendrakuia Velalars were suppressed and oppressed and they being deprived of their holdings, in effect became agricultural serfs. In these days Parayars were set up to spite them and so the conflict between the two sections.



with kind regards.

Yours Sincerely,
(Sd.) R.D. ASIRVATHAM.

To
Dr. K.K. PILLAY,
Institute of Traditional cultures,
University Buildings,
Chennai - 5.

## Institute of Traditional cultures

Dr. K.K. PILLAY
M.A., D.Litt.,
D.Phil., (Oxon)
Director

Room No.94, UniversityBuildings,
Chennai - 600 005.

Dated: 12-7-1976

No. 190/2/PP/76-1.

Dear Thiru Deva Asirvatham

I thank you for your interesting letter. I do hope that you would make a detailed research on Devendra Kula Vellalars and Mallars and publish a correct documented treatise embodying your conclusions.

With regards.

Yours Sincerely,
(Sd.) K.K. PILLAY.

To
Thiru. R. DEVA ASIRVATHAM,
180, Yagappa Nagar,
Thanjavur.

*Review of Moovendar Yaar? by the Indian Express (March II, 1978.)*

The three Tamil monarchs, Chera, Chola and Pandya of yore had a very hoary origin dating back to the pre - Sangam age say two to three thousand years B.C. The author of this book tries to trace their origin to the three very ancient Tamil people called Mallar or Pallar who were agriculturists by profession and the first builders of cities, towns and kingdoms on river banks. These aborigins were later reduced to the state of serfs under the Telgu and Muslim rulers. They were also known by the name of Devandra Kudumbars or Devendra Kula Velalars who were the founders of the Chera, Chola and Pandya Kingdoms and who came to power again after the Kalabra inlerregnum. The Poligar system introduced by the Vijayanagar rulers deprived these people of their land holdings and they were reduced to abject poverty. Being originally inhabitants of the Marudam tract or fertile agricultural land they worshipped Indra (also known as Vendan. Devendran, Purandaran etc.,) the Lord of the region and called themselves Devendra Kulathaar. The author charges literature with deliberately attempting to distort historical facts to suppress the truth aboul the original tribes which ruled Tamil Nadu during the Sangam age and the later period and asserts that all the Tamil Kings were Mallars only who were also responsible for the Harappan civilisation. They met with their fall from the 16th century A.D. These people were not only agriculturists but also warriors. The author believes that Pandavas of Hastinapur belonged to this ancient tribe.









**மூவேந்தர் சேர, சோழ, பாண்டியதேவேந்திரர்கள்.**

மள்ளரை தமிழர் என்று சொன்னேன்,
மற்றவரைத் தமிழர் இல்லை என்று சொல்லவில்லை.,
நான் சங்கநூல்கள் அத்தனையையும் சல்லடை போட்டு
சலித்துவிட்டேன்.அங்கே வீரம்,வீரன், என்ற சொற்கள் இல்லை.
அதற்குப் பதிலாக மள்ளர்/மல்லர் என்ற சொற்கள் இருக்கிறது.

**வீரரும் மள்ளராக இருக்கிறார்கள்**
**மக்களும் மள்ளராக இருக்கிறார்கள்**
**மன்னர்களும் மள்ளர்களாக இருக்கிறார்கள்.**

வியந்து போனேன்.

ஒப்பியல் அறிஞர், டாக்டர் மேஜர் கதிர் மகாதேவன்
முன்னாள் இணை வேந்தர், தஞ்சை பல்கலைக்கழகம்.

---

**அருந்திறல் வீரர்க்கும் பெருந்திறல் உழவர்க்கும்**
**வருந்தகைத்தாகும் மள்ளரெனும் பெயர்**

(திவாகர நிகண்டு)

**செருமலை வீரருந் திண்ணியோரும்**
**மருதநில மக்களும் மள்ளரென்ப**

(பிங்கல நிகண்டு)

JP Computer EXPERTS IN DESIGNING